# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2024.07.09 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# காணி அபிவிருத்தி (திருத்தம்)

**(464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ ஆம் பிரிவின் 2(இ) எனும் உட்பிரிவில் உள்ள, "அவள் அல்லது அவனது திருமணத்தின் மீது" எனும் சொற்கள் நீக்கப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆ ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆ ஆம் பிரிவின் 1(அ) எனும் உட்பிரிவு நீக்கப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு அதன் 1 ஆம் உட்பிரிவில், ''தவறுகின்ற'' எனும் சொல்லுக்குப் பதிலாக, ''நியாயமான காரணமின்றி தவறுகின்ற'' எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.